


பாதசாரிகள் பயன்பாட்டிற்காக, முதல்வர் இ.பி.எஸ்., நேற்று திறந்து வைத்த, ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையம் அருகே உள்ள நடை மேம்பாலம்.

# ரூ.9.07 கோடியில் நடை மேம்பாலம் முதல்வர் இ.பி.எஸ்., திறப்பு

**சென்னை, பிப். 5–**

சென்னை, ஆலந்துார் மெட்ரோ ரயில் முன்புறம், 9.07 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, நடை மேம்பாலத்தை, முதல்வர் இ.பி.எஸ்., 'வீடியோ கான்பரன்ஸ்' வழியே, நேற்று திறந்து வைத்தார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள, இரண்டு வழித்தடங்களும், உயர்மட்ட நிலையில், ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலையத்தில் சந்திக்கின்றன.

இங்கு ஒரு வழித்தடத்திலிருந்து, மற்றொரு வழித்தடத்திற்கு, எளிதாக மாறி செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மெட்ரோ ரயில் நிலையத்திற்கு, முன்புறம் உள்ள, அதிக போக்குவரத்து மிகுந்த, ஜி.எஸ்.டி., சாலையின் எதிர்புறம் உள்ள, ஆசர்கானா பஸ் நிலையத்திற்கு, பயணியர் மற்றும் பொதுமக்கள் சென்றடைவதற்காக, நடைமேம்பாலம் கட்ட முடிவு செய்யப்பட்டது.

இதற்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், 9.07 கோடி ரூபாய் வழங்கியது. இந்நிதியில் சென்னை மெட்ரோ ரயில் நிலையம், நடைமேம்பாலத்தை அமைத்தது.

இதை நேற்று தலைமைச் செயலகத்தில், முதல்வர் வீடியோ கான்பரன்ஸ் வழியே, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நடை மேம்பாலம், 55.41 மீட்டர் நீளம், 6.41 மீட்டர் அகலம் கொண்டது.

இரண்டு 'லிப்டு'கள், நான்கு நகரும் படிக்கட்டுகள், கண்காணிப்பு கேமராக்கள், நடைபாதையின் அனைத்து பகுதிகளிலும், எல்.இ.டி., விளக்குகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதையிலிருந்து, லிப்டுக்கு செல்ல வசதியாக சாய்தளம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் பன்னீர் செல்வம், அமைச்சர்கள் ஜெயகுமார், எம்.சி.சம்பத், தலைமைச் செயலர் சண்முகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலர் ராஜேஷ் லக்கானி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.